# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி

மெய்ஞ்ஞானக்கொடி

சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்



## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளியவை

புரட்டாசி மாத வெளியீடு (Sept-Oct 2013)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114

# இந்து மறுமலர்ச்சி இயக்கமும் பண்பாட்டுப் புரட்சியும்

காணிக்கை ரூ.5/-

# இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்பது என்ன?

இ.ம.இ. என்பது நாத்திகர்களும், கடவுள் மறுப்புப் பகுத்தறிவாளர்களும், மதத்தில் ஆர்வமில்லாதவர்களும், நம்பிக்கையில்லாதவர்களும், மாற்று மதத்தவர்களும்; அரசியல் மறுமலர்ச்சிக்காகவும், பொருளாதாரப் புரட்சிக்காகவும், **பண்பாட்டுப் புரட்சி**க்காகவும் ஒன்று சேருகின்ற ஒரு கட்சியேயாகும்.

இ.ம.இ.யில் இருப்பவர்கள் அன்றுடம் ஒருவேளையாவது அவரவர் வசதி வாய்ப்பு விருப்பம் போல் சிவபுராணம், அருட்சினை மந்திறம், காயந்திரி மந்தரம், மந்திரம் ஓதிப் பூசைகளைச் செய்து (அருட்)சத்திகளைப் பெற்றேயாக வேண்டும். ... ...

---

# உள்ளுறை


1. **தேர்தலின் நான்வேதம் - முன்னுரை, அறிமுகவுரை, தேர்தல் அறிக்கை, அறிவிப்பு ஆணை**
2. **புரட்சி பிறந்தது இந்நாட்டில்.**
   - **அ) புரட்சியின் புலம்பல்.**
   - **ஆ) இ.ம.இ.யின் செயல்விளக்க அறிக்கை.**


— — — — — — — — — — — —

# தேர்தலின் நான்வேதம்

## பொருளடக்கம்:-

1. முன்னுரை
2. அறிமுக உரை
3. தேர்தல் அறிக்கை
4. அறிவிப்பு ஆணை

# தேர்தல் அறிக்கை

## முன்னுரை

*ஓம் தாத்தாக்களே ஆத்தாக்களே போற்றி!*
*ஓம் குருவே துணை! ஓம் குரு வாழ்க!*

குருதேவர் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் அவசர அவசியம் கருதி மக்கள் நலன் வேண்டி விடுத்துள்ள **'தேர்தல் அறிக்கை'**க்கு முன்னுரை எழுதும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது பெரும் மகிழ்ச்சியை நல்குகின்றது. இதற்கான முன்னுரையை இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பொருளாளர், அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் தலைமைப் பொறுப்பாளர் என்கின்ற முறையில் இ.ம.இ.யின் தெளிவான போக்கை, நோக்கை வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆவலில் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.

இந்து மறுமலர்ச்சி இயக்கம் முழுக்க முழுக்க அருள் சார்ந்த ஓர் இயக்கம். மதத்தையும், மதநெறிகளையும் பதினெண்சித்தர்கள் முறையில் சீர்திருத்தும் போக்கையும் நோக்கையும் கொண்டதாகும். இன்றைய தினம் இந்தியா எங்கனும் பொருளாதார ரீதியாக மக்கள் பின் தங்கியுள்ளனர்.

எண்ணற்ற பிறச்சினைகளால் தாக்குண்டு சிதறி சின்னபின்னப் பட்டுப் போயிருக்கிறார்கள். எதையும் வெளியில் சொல்லவோ, எதற்காகவும் போராடவோ முடியாத நலிந்த நிலையில் உள்ளனர். எந்தத் துறையும் சீர்திருத்தம் செய்ய முடியாத அளவிற்கு நிலைகுலைந்து போயிருக்கின்றன. ஆட்சியில் உள்ளவர்களும், சுரண்டல்காரர்களுக்கும், ஏமாற்றுபவர்களுக்கும், மோசடிக் காரர்களுக்கும், ஊழல் புரிபவர்களுக்கும், ஏய்ப்பவர்களுக்கும், பொதுச் சொத்தைக் கொள்ளையடிப்பவர்களுக்கும் துணை போகின்ற, உடன் போகின்றவர்களாகத்தான் காணப்படுகின்றனரே தவிர; நேரடியாக இத் தீமைகளைக் களைந்தெறியும், அழித்தொழிக்கும் மனப்பாங்கு உள்ளவர்களாக இல்லை! மக்களும் எந்த அணியில் திரளுவது என்று புரியாமல் குழம்பிப் போயிருக்கின்றனர். ஏனெனில், இந்தியா விடுதலை பெற்று பல கட்சிகள் இந்தியாவை ஆண்டுவிட்டன. இருந்தும் நாட்டில் வறுமைகள், நோய்கள், இல்லாமைகள், இயலாமைகள், ... இன்னும் ஏழை மக்களை விட்டுப் போகவில்லை. அடிப்படை வசதிகள் கூட கிடைக்காமல் திண்டாடுகின்றனர். இந்த நிலை கடந்த பல நூற்றாண்டுகளாகவே இந்திய மண்ணிற்கு ஆகாயத் தாமரையாகவே இருக்கின்றன.

உலகெங்கும் மக்கள் அறிவியல் தரும் வசதிகளையும், வாய்ப்புக்களையும், இயற்கை தரும் செல்வங்களையும் முறையாகவும் முழுமையாகவும், சாதிமத பேதமின்றி, ஏற்றத் தாழ்வுகளின்றி அநுபவித்து வருகின்றனர். ஈண்டு மட்டும் தொடர்ந்து மக்களைச் சுரண்டி வாழும் கூட்டமும், தமிழ் வாழ்க! தமிழ்நாடு வாழ்க! என்ற முழக்கமிட்ட வண்ணம் பல அரசியல் கட்சிகள் வாழ்ந்தும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், தமிழோ, தமிழினமோ, தமிழ்நாடோ இந்திய அளவில் கூட தலைநிமிர முடியாத; தமிழினம் மானத்தோடு உரிமை பெற்று பெருமையோடு வாழமுடியாத நிலை தொடர்ந்து இருக்கின்றன. தமிழகத்தின் பொறுப்பில் ஆண்டவர்களும், ஆளுகின்ற தலைவர்களும் ஒன்று மத்திய அரசின் அடிவருடிகளாக, கூலிகளாக, கைக்கூலிகளாக, அடிமைகளாக, மிடிமைகளாகத்தான் வாழ்ந்தும், வளருகின்றவர்களாகவும் இருக்கின்றனர்; இரண்டாவதாக, சொந்த இலாபம் தேடி வாழுகின்றவர்களாகவும், தன்னுடைய உற்றார் உறவினர்களுக்காக

சொத்து சேமிப்பவர்களாகவும் வாழ்வதால், வாழ்ந்ததால் மக்கள் மறுமலர்ச்சிக்காக; சமுதாய மறுமலர்ச்சிக்காக இயங்கிக் கொண்டிருக்கும் கலை, அறிவியல், மருத்துவம், விளையாட்டு, ... துறைகளின் முன்னேற்றத்திற்காக எவரும் பாடுபடவில்லை.

இன்றைய தினம் சாதாரண மக்கள் முதல் தொழிலாளர்கள், விவசாயிகள், அலுவலர்கள் உள்ளிட்ட நடுத்தர மக்கள் வரை வாழ வழிவகை செய்யும் திடமான பொருளாதாரச் சிந்தை கொண்ட கட்சிகள் எதுவுமில்லை. விடுதலைக்கு முன்னால் அன்னியனும், விடுதலைக்குப் பின்னால் முதலாளிகளும்தான் நம்மை உறிஞ்சினர், உறிஞ்சி வருகின்றனர். உழைக்கும் மாமக்கள் இந்தியாவில் எண்ணிறந்து கிடக்கும் உணவுகளை, இயற்கை இன்பங்களை, சுகாதார வசதிகளை, சிறந்த ஆடைவகைகளை, ... பெற முடியாமலே கூழுக்கும் மீசைக்கும் இடையே போராடி வருகின்றனர். இத்தகைய இழிவான நிலையை எதிர்த்துப் போராடத் தெம்போ திராணியோ சத்தியோ நடுத்தர வயதினருக்குக் கிடையாது.

போராடும் வல்லமையும், புதிய சமுதாயத்தையும், புதுமை நாட்டங்களையும் படைக்கும் இளைஞர் கூட்டமோ பட்டங்களைப் பெற்றுவிட்டு நாயினும் கீழாய் “வேலை! வேலை!” என்று கூறி தம் அறிவை விலைபேசி விற்கத் துவங்கி விட்டனர். தம்முடைய இழிநிலையைப் பற்றி சிந்திக்கவோ, அதற்காக அதைப் போர்க்களத்தில் சந்திக்கவோ திராணியற்று ஏகபோக முதலாளித் தத்துவக் கருத்துக்களால் (பூர்ஷ்வா), அதாவது திரைப்படம், மேலை இசை, பொருளற்ற இலக்கியங்கள், போதைப் பொருட்கள், விபச்சாரம், ... என்ற எண்ணற்ற திசைதிருப்பும் ஆரவாரப் பேரொலிகளில் மூழ்கிய வண்ணம் உள்ளனர். மக்களுக்குப் பொழுதுபோக்குக் கலைகளும், இலக்கியமும் மயக்கப் பொருளாக (Opium) இருக்கின்றன.

எனவே இவற்றைத் திருத்தியேயாக வேண்டும். இந்த நிலையில் அரசியல்வாதிகள் மக்களை ஒருபுறம் ஏய்க்க, எதிர்த்துப் போரிட, போராட வேண்டிய கூட்டத்தை அடக்கி, ஒடுக்கி, சுருட்டி வைத்திருக்கும் முதலாளிக் கூட்டம் மறுபக்கம் சுரண்ட; காப்பாற்றுவார் யாருமின்றி, அரசியல் ரீதியாகவோ, சமுதாய ரீதியாகவோ யாருமின்றி நாடு தம்போக்கில்

வலுவிழந்து, கட்டவிழ்ந்து, கண்ணியமிழந்து சென்று கொண்டிருக்கின்றது. இந்த நிலையை இனியும் அனுமதிப்போமானால் நாட்டின் நிலை மிகவும் இரங்கத் தக்கதாக மாறிடும்.

இந்திய நாட்டைச் சுற்றிலும் உள்ள நாட்டிலெல்லாம் மக்களாட்சிக்காகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால், இங்கோ அரசு மக்களாட்சி என்ற போர்வையில் மக்களை கொடுமைகளுக்கும் தீமைகளுக்கும் உட்படுத்தி வருகின்றது. தொடர்ந்து எந்தவித மாற்றமின்றி கல்வித்துறையும் மருத்துவமும் மேல்தட்டு மக்களுக்குரிய ஒன்றாகவும், நீதியும் காவல்துறையும் செல்வம் படைத்தவர்களுக்காகவும், ஆடம்பர வசதிகள், போக்குவரத்துக்கள், மின்மினுக்கும் விளக்கோவியங்கள் ஒரு சிலரைத் துதி பாடவும்தான் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. இங்கேதான் பிச்சைக்காரர்கள் பெருகி வருகின்றனர். நோயாளிகள் பெருகி வருகின்றனர். ஏழைக் கூலிகள் பெருகி வருகின்றனர். இந்தியப் பொருளாதாரம் உயர விவசாயத்திற்குத் தேவையான மின் திட்டமோ, நீர் வளத் திட்டமோ தீட்டப்பட வில்லை. மேற்கண்ட இந்த நிலைகளெல்லாம் நீங்க வேண்டுமானால், நாட்டு நலனில் அக்கறை கொண்ட நல்லவர்கள், இன உணர்வும், மொழியுணர்வும் மிக்க வல்லவர்கள், நெறியும் நேர்மையும் மிக்க அருளாளர்கள் நாடாள வேண்டும். இதைத்தான் இ.ம.இ. வலியுறுத்துகின்றது. இ.ம.இ.யின் நோக்கம் அருளாளர்கள் அருள் துறையைச் சார்ந்தவர்கள் ஆட்சி பீடத்திலே அமர வேண்டும். அவர்கள் ஆட்சியாள வேண்டும். அந்த ஆட்சிதான் மக்களின் குறைகளை, தேவைகளை நிறைவு செய்யும்.

வரும் தேர்தல் களத்தில் வாக்காளர்களைச் சந்திக்கப் போகும் உறுப்பினர்களில் யாரேனும் அருள் துறையைச் சார்ந்தவர்கள் இருப்பார்களேயானால் **'பண்பாட்டுக் கழக'**மான **'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'** முன்னின்று அவர்களின் வெற்றிக்காகப் பாடுபடும் போராடும். மதவுணர்வுகள், மதநெறிகள், மதக் கொள்கைகள், மதவுரிமைகள், மொழிக்கொள்கைகள், இனவுணர்வுகள் தழைப்பதற்காகவும், செழிப்பதற்காகவும் பாடுபட்டு வரும் சித்தர் நெறியான இந்து மறுமலர்ச்சி இயக்கம் எக்கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் இ.ம.இ.யின் உதவியைக்

கேட்பார்களேயானால்; தொகுதிக்கு ஒருவராகத் தேர்ந்தெடுத்து கட்சி வேறுபாடின்றி இ.ம.இ.யின் அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், தொண்டர்கள், ஆர்வலர்கள், விருப்பாளர்கள், ... ஞானக் கொடி ஏந்தி வெற்றிக்காக மேடை மீதேறி பேசி வாக்காளப் பெருமக்களைச் சந்திப்பர்.

இ.ம.இ. தேர்தலை சந்திக்கவும், தேர்தலைப் பற்றிச் சிந்திக்கவும் காலம் வந்து விட்டது. குருதேவரின் உறக்கமில்லாமல், ஓய்வில்லாமல் சிந்திக்கும் செயல்முறைகளுக்கு வடிவம் கொடுக்கும், அருளாட்சித் தத்துவத்தைச் செயல்படுத்துவதன் மூலம்தான், உலக வரலாற்றை உற்று நோக்குவதை விட; தமிழக வரலாறை - நீண்ட நெடிய வரலாறுகளை உற்று நோக்கும் போது அருளாட்சி செழித்த காலத்தில்தான் கூட்டு மனப்பான்மையும், ஒருமைப்பாட்டுணர்வும், மொழியுணர்வும், கலை இலக்கிய வளர்ச்சியும், மனித உரிமைகளும் மிக்கிருந்தன. தமிழகத்தைப் பாண்டிய மன்னர்கள் ஆண்ட போதும்; முற்கால பிற்காலச் சோழப் பேரரசுகள் ஆண்டபோதும்; பிற்காலத்தில் சரபோஜி மன்னர்கள், நாயக்கர்கள் ஆண்ட போதும் தெய்வீகத் துறையாளர்கள் ஆட்சிப் பொறுப்பிலே பெரும்பங்கு வகித்த காரணத்தினால்தான் தமிழகம் பண்பாட்டிலும், நாகரீகத்திலும், மருத்துவத்திலும், கலையிலும், அறிவியலிலும், மக்களாட்சித் தத்துவத்திலும், சமய உணர்வுகளிலும், வணிகத்திலும், பொதுவுடமைத் தத்துவத்திலும், ... உயர்ந்தோங்கி நின்றது. சமய ஆர்வலர்களும், சமய நம்பிக்கையாளர்களும்தான் தாங்கள் ஆண்ட காலத்தைப் பொற்காலமாக ஆக்கித் தந்துள்ளனர். இந்தப் பொற்காலங்களில் எல்லாம் பதினெண்சித்தர்கள் இந்த உலகுக்கு அருளிய அருட்கொடைகளை, வாழ்வியல் முறைகளை, பண்பாட்டு வித்துக்களை முறையாக முழுமையாக வழங்கிச் சென்றனர். இந்த அடிப்படையில்தான் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் பிற்காலச் சோழப் பேரரசை அமைத்து ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகளாக பாரினை ஆளும் பைந்தமிழ் ஆட்சியைத் தந்தார். முழுக்க முழுக்க தெய்வீக நெறிகளை மையமாக அமைத்தே சமய சமுதாய அரசியல் முக்கோண பீடத்தை எழுப்பிச் செயல்படுத்தினார். அந்தத் தத்துவம்

'ஞாலகுரு' பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்தில் மீண்டும் மறுமலர்ச்சி அடைய உள்ளது. அதற்கான இயக்கம்தான் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'.

சமய விழிப்புணர்விற்காக தம்மை பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தி, தனது தந்தை போதித்த மார்க்சீய சிந்தனை வடிவிலே ஆராய்ந்து சித்தர் நெறியை இன்று அனைத்து மக்களும் துய்க்குமாறு அருளை அநுபவப் பொருளாகத் தந்து வழங்கி வருகின்றார். இந்தத் தத்துவ அமைப்பு மூழ்கிக் கொண்டிருக்கும் இந்து மதத்தையும், திணறிக் கொண்டிருக்கும் இந்திய அரசியலையும் மீட்க உதவிடும். ஏற்கனவே இம்மண்ணில் இப்பயிர் தோன்றி வளர்ந்து செழித்து கனிந்த ஒன்று. எனவே, மீண்டும் நம் காலத்தில் தவிர்க்க முடியாத அரசியல் கீழ்மைத் தனத்தால் இம்மண்ணில் மலர்கின்றது. பகுத்தறிவுப் போக்கில் மூடநம்பிக்கைகளை மக்களிடையே தகர்த்தெறிந்து அறிவியல் காலத்தை யொட்டி பட்டி தொட்டிகளெங்கும் இ.ம.இ.யின் அருட்பணி விரிவாக்கத் திட்டம் விரிந்து வளர்ந்து கொண்டிருக்கின்றது. இதன் மூலம் ஆயிரக் கணக்கான அடியான்கள் சித்தர் நெறித் தத்துவத்தால் உரமேற்றப் பட்டு வளர்ந்து வருகின்றனர். எனவே, வரும் தேர்தல் களம் இ.ம.இ. சமயப் பணிகளைத் துவக்கியபின் சமுதாயப் பணிகளைக் கவனிக்க, கணிக்க நுழைகின்றது. இ.ம.இ.யின் அடியார்கள், அடியான்கள், அடியாள்களில் எவர் வேண்டுமானாலும் இவ்வறிக்கையின் மூலம் இ.ம.இ.யின் பதிலிகளாக தேர்தலில் நிற்க உரிமை பெறுகின்றனர். நிலையான அரசியல் மறுமலர்ச்சி பெற்றிட சமுதாய மறுமலர்ச்சிக்கான கால்கோளினைத் துவக்குகின்றது இ.ம.இ.

மனிதக் கூட்டத்திற்கென்று வகுத்த மார்க்சீய நெறி கூட மனித உரிமைகளான மொழியையோ, கலாச்சாரத்தையோ, இனத்தையோ, சமயத்தையோ ஆதரிக்கவே இல்லை. இன்று கம்யூனிச நாடுகள் கூட ஒன்றுக்கொன்று முரண்பட்டு வேறுபட்டு ஒன்றையொன்று அடக்க நினைக்கின்றது. ஆனால், சித்தர் நெறியான இ.ம.இ. மனித இனத்தின்

அடிப்படை உரிமைகளை அங்கீகாரத்தை அப்படியே அளிக்கின்ற இயக்கம்.

எனவே, மனித உரிமைகளை மதிக்கின்ற மக்களின் தேவைகளுக்காகப் போராடுகின்ற, மக்களுடைய அன்பு, பணிவு, கனிவு, பாசம், குடும்பம், ... இவற்றிற்காக உழைக்கின்ற ஒரே இயக்கம் இ.ம.இ.தான். எனவே, நலம் பல விளைவிக்கும் நல்லவர்களை ஆதரித்தே இ.ம.இ. தேர்தல் அறிக்கையை மக்கள் முன் வைக்கின்றது. நம்மவர்கள் இனியும் கலங்காது, மயங்காது, தளராது இ.ம.இ.யின் கொள்கைக்காகப் பாடுபட வேண்டுமென வேண்டுகின்றேன்.

இன்றைய இந்தியாவின் உண்மையான நிலையை, மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியை, பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை, தொழிலாளர்களுக்கு ஏழைகளுக்கு கூலிகளுக்கு விவசாயிகளுக்கு எதிராக இழைக்கப்படும் சுரண்டல்களை தன்னுடைய **'தேர்தல் அறிக்கை'**யின் மூலம் இ.ம.இ.யின் தலைவர், ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் விளக்கி உள்ளார். என்ன தேவை? என்ன செய்யும்? என்ன செய்ய வேண்டும்? என்பதை அணிந்துரை, அறிமுகவுரையின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார். இவ்வுரையின் மூலம் குருதேவரின் முடிவான எண்ணமான அருளாளர்கள்தான் ஆளத் தகுதி படைத்தவர்கள். தெய்வீகத் தன்மை படைத்தவர்கள்தான் மக்களின் தேவைகளை உணர்ந்தவர்கள். அருள் துறையைச் சார்ந்தவர்கள்தான் அநியாயங்களுக்கு சாவுமணி அடிப்பவர்கள், சமுதாயத்தை நேரடியாகச் சந்திப்பவர்கள், தன்மானம் மிக்கவர்கள், சுயமரியாதைக் காரர்கள், நாட்டை அடகு வைக்காதவர்கள், இனவுணர்வு மிக்கவர்கள் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றேன்.

அன்பு

(ஒப்பம்) **சி.கவிக்குமார்**

**//உண்மை நகல்//**

*நகல் எழுதியவர்:*

குருவாணை அஞ்சல் ஓலைநாயகம் சித்தரடியார் ஏ.இரவி.

# தேர்தல் அறிக்கை

# அறிமுக உரை

## இந்து மறுமலர்ச்சி இயக்கம்

**(பதிலிகளுக்கும், ஆதரவாளர்களுக்கும்)**

**தலைவர்:-**

இந்து மறுமலர்ச்சி இயக்கம்
உலக மத ஆய்வுக் குழு
உலகத் தமிழ் வளவளர்ச்சிக் கழகம்
உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுச் சங்கம்

**குருதேவர்:-**

அருட்பணி விரிவாக்கத் திட்டம்
சாகாக்கலைக் கல்விக் கழகம்
உலக அருளாளர் பேரவை

**ஞானத்தந்தை:-**

உலக அருளுலக ஆர்வலர் கழகம்
உலகமத ஒற்றுமை மாமன்றம்
உலக சமயக் கலை வளர்ச்சிச் சங்கம்

**இராசிவட்ட நிறைவுடையார், அரசயோகி அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர்**

“இந்துமதமே இந்தியாவைக் காப்பாற்றும்
மதமே மனித உணர்வின் விழி
மதமே மனிதத்தின் மருந்தும் விருந்தும்
மதமே மனிதகுல வரலாறு
மதமே தீயவைகளை மாய்க்கும் கூர்வாள்
மத விழிச்சியே மானுடச் செழுச்சி
மத எழுச்சியே அரசியல் மறுமலர்ச்சி
மதமே ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வழி
அரசியலுக்குட்பட்டதல்ல மதம்!
மதத்துக்குட்பட்டதே அனைத்தும்
ஆத்திகர்தான் நாடாள வேண்டும்
மத உரிமைக்காப்பே மனித உரிமைப் பாதுகாப்பு
மதப் பெருமைக் காப்பே பண்பாட்டுப் பாதுகாப்பு
மதமே தனிமனிதரை நல்வழிப் படுத்தும்
மதமே சமுதாய அமைப்பை வடிவப் படுத்தும்
மதமே அரசியலை ஒழுங்கு படுத்தும்
மதமே அனைத்துக்கும் தாய்
மதத்தின் சேயே பண்பாடும் நாகரீகமும்
மதவழிப் புரட்சியே மிதவாதப் புரட்சி
மதவழிப் புரட்சியே அமைதிவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே அன்புவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே அறவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே சமாதான வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே மென்மைவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே தத்துவ வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே சித்தாந்த வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே வேதாந்த வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே நாதாந்த வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே போதாந்த வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே கருத்து வழிப் புரட்சி

மதவழிப் புரட்சியே எண்ணவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே உணர்வு வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே சிந்தனை வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே கொள்கை வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே குறிக்கோள் வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே மறைவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே முறைவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே வேதவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே சித்தவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே கலைவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே இலக்கியவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே தனிமனிதவழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே சமத்துவ வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே ஒற்றுமை வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே ஒருமைப்பாட்டு வழிப் புரட்சி
மதவழிப் புரட்சியே நன்மைப் புரட்சி
மதவழிப் புரட்சியே உண்மைப் புரட்சி!

களப்பிறரும், பல்லவரும், சோனகரும் (அராபியர்), யவனரும் (கிரேக்கர்), (பிற + மண்ணினர் = அன்னியர்) பிருமணரும், மூவேந்தர் நாட்டைக் கூறுபோட்டு வாழ்வதைப் புரட்சி மூலம்தான் மாற்ற முடியும்" - **அரச பாரம்பரியம்** எனும் நூலிலிருந்து புரட்சி பற்றிக் கூறப்பட்டுள்ள வாசகங்களில் சில இங்கே கொடுக்கப் பட்டிருக்கின்றன.

பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியும்; பிற்காலச் சோழப் பேரரசின் தந்தையும் (கி.பி.785-1279); தஞ்சைப் பன்னாட்டுப் பன்னோக்குப் பல்கலைக் கழகம் அமைத்தவரும்; பத்தி மறுமலர்ச்சிப் போராட்ட இலக்கியங்களை 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகவும்', 'பன்னிரு திருமுறைகளாகவும்' தொகுக்கப்படச் செய்தவரும்; 'அரச பாரம்பரியம்', 'இலக்கிய பாரம்பரியம்', 'குருபாரம்பரியம்' என்று மூன்று வரலாற்று நூல்கள் தொடர்ந்து எழுதப்படும் முறையை உருவாக்கியவரும்; ஆயிரக்

கணக்கான நூல்களை எழுதியவரும்; தமிழ்மொழி, இனம், நாடு என்ற முக்கோணக் கோட்டையை வலிமைப்படுத்தியவரும்; இந்துமதத்தை வடிவப் படுத்தி, வாழ்வும் ஆட்சியும் பெறச் செய்தவருமான குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் வழித் தோன்றலாகிய யாம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக அரியணையில் அமர்ந்து அருளாட்சி புரிவதால் மேற்கண்ட சில கருத்து வாசகங்களை மக்களின் சிந்தனைக்காக வெளியிடுகிறோம்.

பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதம் உண்மையான மதவாதிகளை ஆதரிக்குமாறு திருவுள ஆணைகளும்; தாத்தாக்கள் ஆத்தாக்கள் ஆணைகளும்; உலக அருளாளர்கள் ஆணைகளும் மோன ஞானத் தவத்தில் எமக்கும் எமது அடியான்களுக்கும், அடியாள்களுக்கும், அடியார்களுக்கும் கிடைத்ததால் அம் முயற்சியால் விளைந்த தேர்தல் அறிக்கை எனும் அஞ்சலுக்கு இந்த நெடிய வாசகத்தை **“அறிமுகவுரையாக”** வழங்குகிறோம் யாம்.

“இந்துமதம் செழிக்க உழைப்பதே எம் கடன்”

**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**குருமகாசன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் கருவூரூர்**
9/12/1983

**//உண்மை நகல்//**

*நகலெழுதியவர்:-*

குருவாணை அஞ்சல் ஓலைநாயகம்

அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப் பெருமான் சன்னிதானம், ஆதிபராசத்தி ஆதீனம்

சித்தரடியார் ஏ.இரவி.

9/12/1983

# தேர்தல் அறிக்கை

## இரண்டாவது முப்பெருவிழா

7.2.1983
பொன்னேரி

இனிய நண்ப!

i. தேர்வுகள் நடப்பதால் பொன்னேரிக்கு அதிகாலையிலேயே வந்து விடுகிறோம். அன்றாட அஞ்சல்களை இரவு வீடு திரும்பும் போதே பார்க்கிறோம். எனவே, உடனுக்குடன் பதில் அனுப்ப முடியவில்லை.

ii. "அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே" என்பதன் பொருள் "முயற்சிதான் நம்முடையது; முடிவு அவர்களுடையது" என்பதேயாகும். எனவே, நாமும் அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலால் நடக்குமென்று சோம்பேறித்தனமாக, மூடத்தனமாக, மடத்தனமாக, கண்மூடித்தனமாக, வெறித்தனமாக, குறுகிய போக்குக்குரிய செயலாக, ... செய்து கொண்டே போகக் கூடாது. எச்சரிக்கை! நாம் பகுத்தறிவு வாதிகள், மெய்ஞ்ஞானிகள், ஞானிகள், சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள், புதுமை விரும்பும் புரட்சியாளர்கள், மறுமலர்ச்சிப் புரட்சிச் செயலாளர்கள், ... எனவே, எதை? எப்படி? எப்பொழுது? எவற்றால்? ... வெல்ல வேண்டும் என்று ஆராய்ந்தே திட்டங்களைத் தீட்டிச் செயல்படல் வேண்டும். எச்சரிக்கை!

iii. முன்பு சிறுமுகையூருக்கு எம்மை அவசியம் வரவேண்டுமென்று அன்புக் கட்டளையிட்டு அச்சிடும் பணிகளை அரைகுறையாக நிறுத்தியது போல் மதுரைக்கு 23, 24, 25 அவசியம் வரவேண்டுமென்று ஆணையிட வேண்டாம். **யாம் சனவரி அல்லது பிப்ரவரியில் கூட வரலாம். அவசரமில்லை.** குறிப்பிட்ட அளவு அச்சுப் போட சொன்னவைகளை அச்சுப் போடப் போதிய வசதி வாய்ப்புக்களை உருவாக்கிட முடியாதவர்கள் எம்மை வரவழைத்து என்ன செய்யப் போகிறார்கள்? எல்லாம் வீணான ஆடம்பரம்! ஆரவாரம்! விழாத்தான் செய்யமுடியும். ... இதனை யாம் விரும்பவில்லை.

iv. சமுதாய, அரசியல், தொழில், கலை, இலக்கிய, ... இயக்கங்கள், கழகங்கள், சங்கங்கள், சபைகள், மன்றங்கள், கட்சிகள், ... முதலிய அனைத்தும் தவறு செய்து கொண்டே போகின்றன. தலைவர்களாக, குட்டித் தலைவர்களாக, தளபதிகளாக, வழிகாட்டிகளாக, ... இருப்பவர்கள் எனும் சிறிய தொகையினர் பொதுமக்களை ஏமாற்றியும், உறிஞ்சியும், சுரண்டியும், ... புதுப்புதுப் பணக்காரர்களாக மாறுவதுதான் இந்த நூற்றுண்டின் உண்மையான வரலாறு. இதை மாற்றும் புரட்சியாளர்களே நாம். ஆனால், நாம் ஆண்டவர்கள், பட்டவர்கள், மாண்டவர்கள், தெய்வங்கள், ... பெயரால் **அருள்நெறி** மூலம் அமைதி வழியில், அன்புவழியில், அறவழியில், சமாதானவழியில், விட்டுக் கொடுத்துச் செயல்படும் வழியில், சகிப்புத் தன்மை வழியில் (Tolerance), பொறுமை வழியில் (Patience), மென்மை வழியில் (Non-violence), ... சமுதாய மாற்றத்தை முழுமையாக (A Total Change) உருவாக்கவே விரும்புகிறோம். இதுதான் பண்பாட்டுப் புரட்சி (Cultural Revolution). ஆனால், பேரறிஞர் அண்ணாத்துரை, **"கலைப் புரட்சியையே (Revolution in the field of Arts) பண்பாட்டுப் புரட்சியாக உருவாக்கலாம்"** என்ற தவறான கருத்தில் செயல்பட்டு விட்டார். இதனால் கலையுலக அநுபவங்களை மட்டுமே உடைய கூத்துத் துறையினர் அரசியலில் புகுந்து அனைத்தையும் கேலிக்கூத்தாக, போலியாக, காலியாக, ... ஆக்கிவரும் இரங்கத் தக்க நிலை உருவாகி விட்டது. இதைக் கண்டித்தால் நம்மை 'கலை விரோதி', 'கலைஞர்களை மதிக்கத் தெரியாதவர்', 'கலைக்கு மதிப்பளிக்காதவர்' ... என்றெல்லாம் குறை சாட்டுகின்றனர். எனவேதான், 'கலையுலகத்தால் சமய, சமுதாய, அரசியல், இலக்கிய, தொழில் துறைகள் அனைத்துமே நலிவுக்கும், மெலிவுக்கும், இழிவுக்கும், அழிவுக்கும், முடக்கத்துக்கும், பயனற்ற தன்மைக்கும், செயலற்ற நிலைமைக்கும் உள்ளாகி யிருக்கின்றன' என்ற கருத்தை பொதுமக்கள் புரிந்து கொள்ளுமாறு செய்யும் முயற்சியை நாம் மேற்கொள்கிறோம். நாம், கலையை மதிப்பவர்கள், சுவைப்பவர்கள், போற்றுபவர்கள், பேணுபவர்கள், ... ஆனால், எல்லாத் துறைகளையும், துறையினரையும் கலையுலக எண்ணமும், சிந்தனையும், செய்தியும், கலைஞர்களுமே ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைக் கண்டிக்கிறோம்! தவறு எனக் குற்றம் சாட்டுகிறோம்.

- "கலைத்துறையால் நாட்டின் எல்லாத் துறைகளின் முன்னேற்றங்களும் கெட்டுவிட்டன, பாழாகி விட்டன" என்ற குற்றச்சாட்டை அருளுலகத்தவர்களான நம்மால்தான் துணிவோடும், கனிவோடும், பணிவோடும் அணி சிறக்கச் சொல்ல முடியும்! சொல்ல முடியும்!! சொல்ல முடியும்!!!

v. நாடு முழுவதும் நோயை (தொழுநோய்), உடல் ஊனத்தை (நொண்டி, குருடு, ...), முதுமையைச் சான்றுகக் காட்டிப் பிச்சை எடுப்பவர் கூட்டம் பெருகிக் கொண்டே போகிறது. எத்தகைய நல்லவர்கள் நாடாண்டாலும் இதை மாற்ற முடியவே இல்லை. எனவே, நம்மைப் போன்ற அருளுலக வல்லவர்களைத் தவிர வேறு யாராலும் இந்த வெட்கக் கேடான, இரங்கத் தக்க, இழிவான சமுதாய நிலைகளை மாற்றவே முடியாது! முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது!

vi. இவற்றை விடச் சிறுவர்கள் கல்வி கற்காமல் வறுமையால் வேலை செய்வதும்; திருடுவதும், பிச்சை எடுப்பதும் தடுக்கவே முடியாத அளவு அரசு ஒப்புக் கொண்ட நியாயச் செயலாக வளர்ந்து விட்டது. இதேபோல், பசிக்காகவும், படோடாபத்துக்காகவும் விபச்சாரம் செய்வது சமுதாயமே ஏற்றுக் கொண்டுவிட்ட நியாயச் செயலாக வளர்ந்து விட்டது. இவற்றை வேலையில்லாத் திண்டாட்டமும்; அனாதைகளின் அவல ஆசைகளும்; பணக்காரத் திமிர் பிடித்த வெறியர்களின் விளையாட்டுக்களும் எரியும் நெருப்பில் நெய் வார்ப்பது போல் மேலும் மேலும் கொழுந்து விட்டெரியச் செய்கின்றன. இவற்றை எந்த நல்லவர்களாலும் அணைக்க முடியாது. நம்மைப் போன்ற அருளாளர்களின் அருள் மழையால்தான் அணைக்க முடியும்! முடியும்!! முடியும்!!!

vii. அரசியல்வாதிகள் அனைவருமே அடுத்த தேர்தலுக்காக இலட்சக் கணக்கிலும் கோடிக்கணக்கிலும் பணத்தை எல்லா ஊழல்களாலும் சேர்த்துக் குவித்துக் காப்பதில்தான் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். யாருக்குமே நாட்டிலுள்ள குறைகள், தவறுகள், தேவைகள், ஏக்கங்கள், தேக்கங்கள், வீக்கங்கள், கொள்ளை இலாபச் செயல்கள், ... முதலியவை பற்றிக் கவலையே இல்லை. **யாரும் பிறரின் குற்றங்களைக் கண்டு கொள்வதே**

**இல்லை என்கிறபோது எப்படிக் குற்றங்களைக் கண்டிக்க முன்வருவார்கள்**. எனவே, அருளாளர்கள் நேரடியாக ஆட்சித் துறையில் பங்கு பெற வேண்டும். நாம், ஒரு பண்பாட்டுக் கழகம் என்பதால் பஞ்சாயத்து, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சித் தேர்தலில் நமது **(பிரதிநிதிகளை) பதிலிகளை** நேரடியாக ஈடுபடச் சொல்ல வேண்டும். அதற்கு இந்த அஞ்சலையே நமது தேர்தல் அறிக்கையாக (The Election Manifesto) அச்சிட்டு வழங்கிச் செயல்படும் தரம், திரம், தீரம், வீரம், உரம், அறம், மறம், ... நம்மவர்க்கு வளரட்டும்! வலிமையாகட்டும்!

viii. சமுதாய நலப் பகைவர்கள், விரோதிகள், துரோகிகள், எதிரிகள், ... பெரும்பாலும் அனைத்து இயக்கங்களிலும் ஊடுருவல் செய்திடுகிறார்கள். அதைத் தடுக்கத்தான் நாம் அருட்கலைகளைப் பயன்படுத்துகிறோம். நமது முடிவுகளை அருட்கணிப்பின் மூலமும், ஞானக்காட்சிகள் மூலமும், உலக அருளாளர்களின் கருத்துக்களின் மூலமும் சரி செய்து கொள்ளுகிறோம். எனவே, நாம் காட்டுமிராண்டித் தனமான கற்பனைகளையும், கதைகளையும், முடைநாற்றமடிக்கும் மூடநம்பிக்கைகளையும், குருட்டுத்தனமான பழக்க வழக்கங்களையும், கண்மூடித்தனமான சாத்திற சம்பிறதாயங்களையும், ... வலியுறுத்தும் பழமைமிக்க மதவாதிகள் அல்ல! அல்ல!! அல்ல!!! அல்லவே அல்ல! - நாம், காலக் கணக்கீட்டு முறையில், மிகத் தெளிவான, முறையான வரலாற்றையும், தத்துவத்தையும், கொள்கையையும், குறிக்கோளையும் உடைய சித்தர்நெறி எனும் பகுத்தறிவு மதமான இந்து மதத்தவர்களே. “இந்துமதம் என்பது ஒரு சமூக விஞ்ஞானமே (The Indhuism is a Social Science)” என்ற கருத்தைச் செயலாக்கும் சட்டதிட்டங்களும், கட்டுப்பாடுகளும், நெறிமுறைகளும், செயல்திட்டங்களும், ... உடையவர்களே நாம். அனைத்துலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்க முயலுபவர்களே நாம். நம்மால்தான் இந்தியாவில் ஒற்றுமை, ஒருமைப்பாடு, சமாதானம், அமைதி, அன்பு, சமத்துவம், சகோதரத் தத்துவம், பொதுவுடமை, ... முதலியவைகளைச் செயலாக்க முடியும். ஏனெனில், நாம்தான் எந்தவித வேற்றுமைகளும், ஏற்றத்தாழ்வும், வேறுபாடும், பாகுபாடும், தீண்டாமையும், சர்வாதிகாரமும், கொத்தடிமையும், வெறியும், குறுகிய போக்கும் இன்றி அனைவருக்கும் அருளை அநுபவப் பொருளாக

வழங்குகிறோம். அனைவரும் அருளைப் பெற வழிகளைக் கூறி; “வாருங்கள் உங்களைக் கடவுளாக்குகிறோம்” என்ற அறிவிப்பையும் வழங்குகிறோம். எனவே, நம்மால்தான் புதுமைச் சமுதாயத்தைப் படைக்க முடியும்! உருவாக்க முடியும்!! முடியும்! முடியும்!! முடியும்!!!

இவற்றை உணர்ந்தும் உணர்த்தியும் நம்பிக்கையோடும் தன்னலமின்றியும் செயல்படுங்கள்! இளைஞர்களைச் சிந்திக்கச் செய்து விட்டோமென்றால் நமது இயக்கம் காட்டுத்தீ போல் விரைவில் பரவிடும். எனவே, பெரியவர்களையும் நடுத்தர வயதினரையும் மட்டுமே நம்பிச் செயல்பட வேண்டாம். முழுக்க முழுக்க உழைப்பாளி இளைஞர்களையும், படித்த இளைஞர்களையும், மாணுக்கர்களையும் சிந்திக்கச் செய்ய வேண்டும். அவர்கள் கையிலே படித்துப் பெற்ற சான்றிதழ்கள் (certificates) அவர்களைப் பிறரிடம் பல்லிளித்துக் கெஞ்சியும், கும்பிட்டும், மன்றாடியும், அழுதும், தொழுதும், வேலைகேட்டு அலையும் பிச்சைக்கார நெஞ்சமும், அடிமைச் சிந்தையும் உடையவர்களாக ஆக்குகின்றன. இப் பேருண்மையினை அவர்கள் புரியுமாறு செய்ய வேண்டும். **பெரும்பாலும் இன்றைய கல்வி கோழைகளை, அடிமைகளை, அப்பாவிகளை, தன்னலவெறியர்களை, ... உருவாக்குவதாகத்தான் இருக்கின்றது**. அதாவது, நம்மை அன்னியர்கள் என்றென்றும் அடிமைகளாக, எடுபிடிகளாக வாழுமாறு செய்ய வகுத்த கல்வித் திட்டம்தான் இன்னும் செயலில் இருக்கிறது. எனவே, நாம் விடுதலைக்கும் பிறகும் மறைமுகமாக அன்னியர்களால்தான் ஆளப்படுகிறோம். நமக்கு எழுத, பேச, விரும்பிய போர்க்கலைகளைக் கற்க, ... உரிமையே இல்லாத அடிமைவாழ்வு தொடர்ந்து வளர்க்கப்படும் வண்ணம்தான் கல்வி தரப்படுகிறது... என்பதுதான் உண்மை. இதை உணர்ந்தும் உணராமல் பதவிவெறி, பணவெறி, புகழ்வெறி, ... முதலியவைகளால் அடிமை வாழ்வு வாழ்கிறார்கள் அரசியல்வாதிகள். அவர்களை,

“யாமார்க்கும் குடியல்லோம்
*யமனையும் அஞ்சோம் ...”* - *(அப்பர்) திருநாவுக்கரசர் தேவாரம்*

என்ற அஞ்சாமை படைத்த நம்மைப் போன்ற அருளாளர்தான் திருத்த முடியும்! மாற்ற முடியும்! அதாவது, நம்மால்தான் பொதுமக்களுக்கு

வாழ்வில் உறுதியும், வசதியும், நம்பிக்கையும், மகிழ்வும், நிறைவும், நிம்மதியும், ... உருவாக்கித் தரமுடியும்! முடியும்!! முடியும்!!!

இப்பேருண்மைகளை அச்சிட்டும், பேச்சிலும் மக்களுக்கு அறிவிப்புச் செய்து எமது மதுரை வருகைக்குரிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அவசரம் வேண்டாம். வசதி வாய்ப்பு இல்லாவிட்டால் எமது வருகையை அடுத்த மாதத்துக்குக் கூடத் தள்ளிப் போடலாம். (இதனைச் சிறிய புத்தக வடிவில் அச்சிடவும்). **குருவாணை**.

**குருமகாசன்னிதானம்**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்**

7/12/83

தலைவர் - இந்து மறுமலர்ச்சி இயக்கம்,
குருதேவர் - அருட்பணி விரிவாக்கத் திட்டம்,
ஞானத்தந்தை - அருளுலக ஆர்வலர் கழகம்,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
அரசயோகி, ஆத்தாள் அமளிகை, பராசத்தி திருவடி,
கொற்றவை இருக்கை, குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் கருவூரூர்
அருளிய மோன ஞான உரையினை எழுதியவர்:

**குருவாணை ஓலைநாயகம் பொறுப்பாளர் இ.ம.இ. + அ.வி.தி. அருள்மிகு அங்காள பரமேசுவரி சன்னிதானம் சி.கவிக்குமார் B.Sc.,** 7/12/1983

**//உண்மை நகல்//**

*நகலெழுதியவர்:-*

குருவாணை அஞ்சல் ஓலைநாயகம்

அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப்பெருமான் சன்னிதானம், சித்தரடியார் ஏ.இரவி, 7/12/1983

# அறிவிப்பு ஆணை

## குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் அழைப்பு

# இந்துமத இயக்கங்கள் அனைத்தும் ஒன்றிணையட்டும்

**இருளகற்றும் அருளாட்சி அமைக்க; அனைத்துவித தேர்தல்களிலும் *ஆத்திகர்களே* வெற்றி பெற வேண்டும்.**

**மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சித் தேர்தல்களில் *இந்துமதத்தின் பதிலிகளும், ஆதரவாளர்களும்* வெற்றி பெறப் பாடுபடுவோம்.**

**இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆதரவு ஆத்திகர்களுக்கே!**

**தேர்தலில் நிற்க ஆர்வமுடையோர் தொடர்பு கொள்க!**


தொடர்பு:-

(i) **இ.ம.இ., அ.வி.தி. பொறுப்பாளர்**
பிறம்மாச்சாரியார்

(Ii) **அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயலாளர்**
பரமாச்சாரியார் வீரமாகாளி சன்னிதானம்

**//உண்மை நகல்//**

**//இந்தக் கட்டுரைத் தொகுப்பின் மூலநகல்: கும்மிடிபூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது. இந்த நகலும் அவர்தம் கோப்புக்களில் இருந்தது.//**



## மெய்ஞ்ஞானக்கொடி

# புரட்சி பிறந்தது இந்நாட்டில்

## அருளுரை வழங்கியவர்

"ஞாலகுரு"
குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரூர்
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி

## எழுதியவர்


சித்தரடியார் சோ.இரவீந்திரன்
சித்தரடியான் இரா.சண்முகானந்தன்

## கருத்துத் தொகுப்பாளர்கள்

சித்தரடியாள் வாலைபரமேசுவரி விசாலாட்சி
சித்தரடியாள் வாலைபரமேசுவரி எழிலரசி
சித்தரடியாள் வாலைபரமேசுவரி இராசேசுவரி
சித்தரடியான் வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன்
சித்தரடியான் தாயுமானவர் சன்னிதானம் பெரி.முத்தையா
சித்தரடியான் வெல்போர்க் கொற்றவை சன்னிதானம் கு.இரவிமணி
சித்தரடியான் சங்காத்தம்மன் சன்னிதானம் மு.பெருமால்

# புரட்சியின் புலம்பல்

## வேதகுரு, நாதகுரு, போதகுரு, ஆகமகுரு, குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார் அருளிரக்கத்தால் வழங்கிய கவிதை.



செப்படு மந்திற வித்தையே நம்பிடுவார்
செப்பிடு அறிவுரை ஏதும் கேளார்
உப்புக்கல்லை வைரமென்று ஒப்புக் கொள்வார்
தப்புகளைச் சரியென்று எப்போதும் வாதிடுவார்
அப்பாவிகள் இவர்களுக்கு நிகர் எங்குமில்லை
இந்நாட்டில் முழங்கியோ கதறியோ விளக்கி
எந்நாளும் நிகழப் போவது ஒன்றுமில்லை தோழா
சப்பிட்டாலும் சளைக்காது உழைக்கிறோம் நாம்
எப்பாடு பட்டாலும் ஏழை பிழைப்பரா
இப்பாடு வெறும் கூப்பாடு ஆகுமோ!
சீச்சீ! விட்டிடலாகாது புரட்சி முயற்சியை
கேடுகள் மிகுந்திடப் பார்ப்பது நியாயமா

படுகளம் கண்டாவது தடுப்போம் கேடுகளை
கடவுளர் போர்க்கோலம் இதற்கே போலும்
ஆயுதம் தாங்கிகளே நம் ஆண்டவர்
அறியாதார் இதை வெறுப்பர் புரட்சியை
பலிகள் கேட்கும் தெய்வங்கள் துணை வரட்டும்
பலியாகக் கிடைப்பர் கொழுத்தோர் புரட்சியில்
வேலியாக அருளே வேண்டிப் பெற்றுக்
கூலிகள் பாட்டாளிகள் ஏழைகள் உய்யட்டும்
மதப் புரட்சியே மனிதப் பண்புக்கான புரட்சி
இதைப் புரியவே இத்தனை காலமாச்சு
கோவில்கள் பாசறைகள் ஆகட்டும் கும்பிடுவோர்
மாவீரர்கள் ஆகட்டும் பூசை மேளங்கள்
போர்ப்பரணி பாடட்டும் யாரினி வெல்ல
இப்படையை எங்கும் வெல்ல யாருளர்
ஆண்டவன் திருமுன் சமமாகும் அனைவரும்
அரசபோக உரிமைகளும் பெறுவர் சமமாக
முதலாளி தொழிலாளி சமமே இனி
சுரண்டலில்லை ஏமாற்றில்லை வறுமையில்லை புரட்சியில்
அதனால் வாழ்த்துவோம் என்றும் புரட்சியை
வாழ்க புரட்சி! வளர்க புரட்சி!!
வளமுறுக புரட்சி! வலிமை பெறுக புரட்சி!!
வள்ளலாய் வாழ்வு தருக புரட்சி!
வணங்கும் கடவுளர் தந்ததே புரட்சி!
வறட்சி நீக்கப் பெற்ற வரமே புரட்சி!
புறத்தும் அகத்தும் பூத்திடுக புரட்சி!
புரட்சி பிறந்தது இந்த நாட்டிலும்
புரட்சி வளரும் எல்லா வீட்டிலும்.

# இந்து மறுமலர்ச்சி இயக்க செயல்விளக்க அறிக்கை

அம்பத்தூர்

*ஓம் குருவே போற்றி! ஓம் குருவாழ்க! ஓம் குருவே துணை! ஓம் குருவே எல்லாம்!*

**அனுப்புநர்:-**

அருள்மிகு சோழப்பெருமண்டல அருளாட்சித் திருவோலக்க நாயகம்;
ஆத்தாள் முப்புரம் கொண்டருளு தேவி ஆதிபராசத்தி ஆதீனம்
பதினெண்சித்தர் குருவழி கொண்டருளு குரிசில்;
சித்தரடியார் சோ.இரவீந்திரன்.

**பெறுநர்:-**

அருள்மிகு பதினெண்சித்தர் சத்திபீடம்
தேவி கருப்பழகி பீடாதிபதி,
பெரியவர் காருகுடி N.திருநாவுக்கரசுப் பிள்ளை அவர்கள் சமூகத்திற்கும்;;
அருள்மிகு அம்பகரத்தூர் பத்திரகாளி சன்னிதானம்
புள்ளம்பாடி உத்தண்டகாளி பீடாதிபதி
சித்தரடியான் A.P.திருஞானசம்பந்தம் அவர்கள் சமூகத்துக்கும்;

எழுதப்படும் **இந்து மறுமலர்ச்சி இயக்க செயல்விளக்க அறிக்கை அஞ்சல்.** குருவுள ஒப்புதலும் திருவாணையும் பெற்று விடுக்கப்படும் **சித்தர்நெறி செயல்விளக்கத் திருவோலை**. எனவே, அன்புகூர்ந்து இதன் நகலை வீரமாகாளி சன்னிதானம், தேவி கருமாரியம்மன் சன்னிதானம், R.E.C., இரா.இரா.முத்திரைக்கோட்டை பெ.வைத்திலிங்கம், குருதேவர், ... முதலியோருக்கு அனுப்பி வையுங்கள்.

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் தங்களுக்கு எல்லா நலன்களும் உண்டாகட்டும். தாங்கள் சித்தர்களை வழிபடுவதோடு, சித்தர்கள் அமைத்த எல்லா வழிபாட்டு நிலையங்களிலும் வழிபாடு செய்யலாம். ஆனால், உங்களுடைய அருட்பட்டத்துக்குரிய தெய்வங்களிடமும், அவையுள்ள

கோயில்களிலும், அவற்றை வேண்டி நீங்கள் செய்யும் பூசைகளிலும் மட்டும்தான் நீங்கள் சித்தரடியானுகச் செயல்பட்டு அருள் பிறருக்கு வழங்கலாம். மற்றபடி அருகில் உள்ள வாத்தலையம்மன் கோயிலில் கூட நீங்கள் சித்தரடியானுகச் செயல்படக் கூடாது. அதாவது, நீங்கள் எல்லோரையும் போல் பத்தர்களுக்குள் ஓர் பத்தராகத்தான் இருக்க வேண்டும். இந்தச் சித்தர் நெறி விளக்கம் எல்லா அடியான்களுக்கும் பொருந்தும். அதனுல்தான், இந்த அஞ்சலை தாங்கள் சந்திக்கும் அடியான்களுக்கெல்லாம் படித்துக் காண்பியுங்கள். ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட அனைவருக்கும் நகல்கள் அனுப்பிய பிறகு உங்களால் முடிந்தவரை இந்த அஞ்சலுக்குப் பல நகல்கள் எடுத்துத் தாங்கள் அறிந்த அல்லது தங்களைச் சந்திக்கின்ற எல்லா அடியான்களுக்கும் வழங்கிடுங்கள். இது குருவாணை.

2) இவ்வுலகில் இதுகாறும் தோன்றிய அவதாரங்கள், தேவகுமாரர்கள், தேவதூதர்கள், தேவப் பிரதிநிதிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், தொகையடியார்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள், சீவன்முத்தியாளர்கள், மகான்கள், முனிவர்கள், ஞானிகள், இருடிகள், அடிகளார்கள், ... என்ற மிகுந்த பட்டியலுக்குரிய இறை மாட்சிக்குரியவர்களில் எவருமே தங்களுக்குச் சமமாக விந்து வழி வாரிசுகளையோ, தோன்றல்களையோ, குரிசில்களையோ, நாயகங்களையோ, சன்னிதானங்களையோ, பீடங்களையோ, ஆதீனங்களையோ, தம்பிரான்களையோ, அமளிகைகளையோ, இருக்கைகளையோ, திருவடிகளையோ, ... உண்டாக்கியதே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!!! ஆனுல், நமது குருதேவர் அவர்களால் உருவாக்க முடியாது என்று கூடக் கூறியது இல்லை.

எனவே, அவர்களெல்லாம் ஏன் தனக்குச் சமமானவர்களை உருவாக்கவில்லை என்பதை நம்மைப் போன்றவர்கள் அவசரமாகவும், அவசியமாகவும், உடனடியாகவும் சிந்தித்தேயாக வேண்டும். அப்பொழுதுதான் நமக்கு நமது குருதேவரின் அருமையும், பெருமையும், பெரும்போக்கும், பரந்த நோக்கும், அளப்பரிய ஆர்வமும் விளங்கிடும். அது மட்டுமல்லாமல் நாமறிய அவர் தமக்குச் சமமாக நம்மைப் போன்று நூறு பேர்களுக்கு மேல் உருவாக்கி இருக்கிருர்கள். நம்மையெல்லாம் அருளுலகில் அவரவர் தரத்திற்கும், திறத்திற்கும், அறிவுக்கும், ஆர்வத்துக்கும் ஏற்ப தன்னிச்சையாகச்

செயல்பட உரிமை வழங்கி யுள்ளார்கள்.

இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்தால்தான் நமது குருதேவர் மிகப்பெரிய புரட்சிகள் செய்து வருகிறுர் என்ற பேருண்மை விளங்கிடும். அவருடைய ஒவ்வொரு சொல்லும், செயல்திட்டமும், செயலும், வழிநடத்தும் ஆணையும் முழுக்க முழுக்க புரட்சிப் போக்கும், புதுமை நாட்டமும் உடையன. அதனுல்தான் இதுவரை மதத்துறையில் உள்ள கற்பனைகளையும், கனவுகளையும், அநுபவக் குறைவாய் நம்பப்பட்ட மூடநம்பிக்கைகளையும், மூடப் பழக்கவழக்கங்களையும், சுரண்டல்காரர்களின் சூழ்ச்சிகளையும், ஏமாற்றுக்காரர்களின் பொய்யுரைகளையும், புலவர்களின் கதைகளையும் முழுமையாகக் கண்டிக்கும் முயற்சியில் நேரடியாய் ஈடுபட்டுள்ளார் நமது குருதேவர்.

எனவேதான், மதவாதிகள் நமது குருதேவரை நாத்திகரோ அல்லது பகுத்தறிவு வெறியரோ அல்லது மார்க்சீயச் சித்தாந்த வெறியரோ அல்லது மறைமுகப் புரட்சிவாதியோ என்றெல்லாம் எண்ணி மருண்டு, வெருண்டு, அரண்டு ஒதுங்கி விடுகிறுர்கள். அதே நேரத்தில் நமது குருதேவர் நமது இந்துமதத்தின் பேருண்மைகளையும், பேராற்றல்களையும், பெருமைமிக்க வரலாறுகளையும், அரிய பெரிய தத்துவங்களையும், பெரும்பயன் நல்கும் செயல்முறைகளையும், ஒழுகலாறுகளையும், பழக்க வழக்கங்களையும் மிகத் தெளிவாகவும் எளிமையாகவும் அறிவியல் முறையில் (In a scientific approach and attitude) விளக்கி வருகிறுர் என்பதைக் கண்டு அரசியல் வாதிகளும், சமுதாய சீர்திருத்தவாதிகளும், நாத்திகர்களும், பகுத்தறிவுவாதிகளும் இவரை மதவெறியர் என்று கருதி வெறுத்தும் மறுத்தும் ஒதுக்கி வருகிறுர்கள். எனவேதான் நமது குருதேவர் தமது அருட்பயணத்தை மிக நெடுங்காலமாக ஆங்காங்கே கிடைக்கக் கூடிய விரல்விட்டு எண்ணக் கூடிய மிகச் சிலருடனேயே தொடர்ந்து நிகழ்த்தி வர நேரிட்டு விட்டது. தாத்தாக்கள், ஆத்தாக்கள் அருளால் அவருக்குக் கிடைத்திட்ட இந்த 'ஒதுக்கல் நிலை' அவரைப் பல பதுக்கல் பேர்வழிகளும், பணக்காரர்களும், சூதுமதியாளர்களும், சுயநலக் கும்பல்களும், சூழ்ச்சிக்காரர்களும் வளைத்துக் கொள்ளாமல் நம்மைப் போன்றுேர் அவரை நெருங்கும் நல்ல நிலையே தொடர்ந்து இருந்து வருகின்றது.

ஆனால், இன்றைய இந்தியத் துணைக்கண்டம் போய்க் கொண்டிருக்கின்ற நிலையைப் பார்த்தால், இனியும் நாமெல்லாம் ஒதுங்கி, மறைந்து, தனித்து, குறுகிய வட்டாரங்களுக்குள் இருப்பதில் இருந்து உடனடியாக விடுபட்டு வெளிக் கிளம்பியே ஆக வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டு விட்டது என்று எண்ண வேண்டியிருக்கின்றது. அதனால்தான், விரைந்து இல்லறம் ஏற்கப் போகின்ற நான் குறிப்பிட்ட காலத்திற்கு என்னுடைய இல்லற வாழ்வு ஏற்கும் முயற்சியைத் தள்ளி வைத்து விட்டு ‘சித்தரடியார்’ என்ற துறவுநிலை வாழ்வை ஏற்று முழுநேர ஊழியனாகச் செயல்பட முடிவெடுத்துள்ளேன். இனியும் நம்மவர்கள் ஊர் ஊராக, கிராமம் கிராமமாக, தெருத் தெருவாக இருந்து அருள்வழங்கி தனிமரங்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. அதாவது, கற்பூரத் தட்டும் பூசைமணியும் ஏந்தும் கரங்களில் புதிய சமுதாயத்தைச் சமைக்கும் கருவிகளை ஏந்தியே ஆக வேண்டும். திருநீறும், குங்குமமும், அருளூறு பூசனைப் பொருள்களும் வழங்கிக் கொண்டிருக்கும் நமது கைகள் சமய விழிச்சிக்கும், சமுதாய எழுச்சிக்கும், பொதுமக்கள் கிளர்ச்சிக்கும், அரசியல் வளர்ச்சிக்கும், பொருளாதார செழிச்சிக்கும் வழியமைக்கும் சாதனங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட வேண்டும். எந்நேரமும் அருளூறு இறைமாட்சி வாசகங்களை ஒலித்துக் கொண்டிருக்கும் நமது வாய், மறுமலர்ச்சியின் வளர்ச்சிக்காகப் புரட்சி எண்ணங்களையும், புரட்சிச் சிந்தனைகளையும் தோற்றுவிக்கும் புதுமைக் கருத்துக்களைத் தொடர்ந்து கடலலை போல் பேரொலியிட்டு ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும்.

இனி நாம் தனிமனிதர்கள் அல்ல. நாம் மனித இனத்தின் தோற்றத்துக்கு முன் தோன்றிய இந்து மதத்தின் மறுமலர்ச்சிக்காக, நிறுவன நிர்வாகக் கட்டமைப்பும், செயல்பாட்டு ஒழுங்கமைப்பும் உடைய ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ எனும் பண்பாட்டுக் கழகத்தின் பெயரில் (In the name of the Cultural Organization, The Indhu Marumalarchy Iyakkam IMI) நாமெல்லாம் ஒன்று திரண்டாக வேண்டும். நாமெல்லாம் உதிர்ந்து போகக் கூடிய ஒரே மரத்தின் இலைகளல்ல. எளிதில் ஒடித்தாலும் ஒடியாத ஒரே ஆலமரத்தின் விழுதுகளைப் போன்றவர்கள். இன்னும் சொல்லப் போனால் குருதேவர் என்னும் வானிலிருந்து தனிப்பட்ட எண்ணற்ற மழைத் துளிகளாகத் தரையில் விழுந்த போதிலும், அனைவரும்

ஒன்று சேர்ந்து இரண்டறக் கலந்து வற்றுது ஓடும் காவிரியாற்றின் நீர் போன்றவர்களாகும். எனவே, காவிரியாறு தான் செல்லுமிடம் எல்லாம் வளங்கொழிக்கச் செய்வது போல் நாம் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் மட்டுமல்லாமல் உலகெங்கும் உள்ள மக்களிடையில் அருட்பயிர் பசுமையாகத் தளிர்க்கும் படி செய்ய வேண்டும். அந்தப் பயிரின் விளைச்சலால் எல்லா வறுமைகளும் அகன்றிடும், எல்லா வளங்களும் மிகுந்திடும்.

3) இனிய நண்ப! நமது குருதேவர் அருளுலக மரபுகளையும், ஒழுகலாறுகளையும், நம்பிக்கைகளையும், சட்டதிட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் உடைத்து எரிந்து விட்டுப் புரட்சி செய்ததன் பயனாக ஆங்காங்கே நூற்றுக்கணக்கில் அவருடைய அருளுலக வாரிசுகளும், குரிசில்களும், தோன்றல்களும், பிற அருட்பட்டங்களுக்குரியவர்களும் உருவாகி வளப்பட்டு, வலிமைப்பட்டு விட்டார்கள். ஆனால், அவர் தன்னுடைய புரட்சிக்காக அருளுலகம் விதித்த தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்று தன்னுடைய அங்கத்தை இழந்து, குருதியைக் கொட்டி, மறவேள்வியினைப் பெருவேள்வியாக, வெற்றி வேள்வியாகச் செய்து முடித்துள்ளார். இதுகாறும் அவர் சிந்திய வியர்வைத் துளிகளும், கொட்டிய கண்ணீரும் உலைக்களப் பெருநெருப்பாயிற்று. நாமெல்லாம் அந்த உலைக்களத்தில் வார்த்தெடுக்கப் பட்டோம். இப்போது அவர் கொட்டியுள்ள குருதி எண்ணற்ற வகையான பேராற்றலுடைய போர்க்கருவிகளை வார்த்தெடுத்துத் தந்து விட்டது. அவற்றைத் தாங்கி அணிவகுத்து, போர்க்களம் புக வேண்டியது நமது கடமை. எக்காரணத்தை முன்னிட்டும் இனியும் நாமும் காலதாமதம் செய்து கொண்டிருக்கக் கூடாது. காலதாமதம் செய்வது தற்கொலைக்கு சமமாகும். நாம் இப்பொழுதே செயல்படத் துவங்கியாக வேண்டும். இல்லாவிடில் எப்பொழுதுமே செயல்படத் துவங்க முடியாது.

4) நண்ப! இப்படி நான் எழுதுவதற்குக் காரணம் படுத்த படுக்கையாக உள்ள நமது குருதேவர் சிந்தை நொந்தும், மனம் வெந்தும், உணர்வு நைந்தும் கூறுகின்ற வாசகங்களின் எதிரொலியே ஆகும். இதனை நான் சரியாகத்தான் சொல்கின்றேன் என்பதனை இன்றைய நாட்டுநடப்பினை உற்று நோக்கினால் புரிந்து கொள்ளலாம். முன்பெல்லாம் சமயச்

சொற்பொழிவுகளோ, இலக்கியச் சொற்பொழிவுகளோ, கலை நிகழ்ச்சிகளோ எது நடந்தாலும் எல்லாவகையான மக்களும் மறுப்பு, வெறுப்பு, ஒதுக்கீடு இல்லாமல் ஆர்வத்தோடு பெருங்கூட்டமாகக் கூடி கேட்டுப் பங்கு பெற்று மகிழ்வார்கள். அதற்குக் காரணம் பன்னெடுங் காலத்திற்குப் பிறகு விடுதலை பெற்றிட்ட இந்தியாவில் ஏதாவது ஓர் அமைப்பின் மூலம் பொருளாதாரச் சமத்துவமும், சமுதாயச் சமத்துவமும், அரசியல் பொதுவுடமையும் ஏற்பட்டு விடாதா? என்ற மயக்கமான பேராசையும், ஏக்கமான நோக்கமும்தான். ஆனால், இந்தியத் துணைக்கண்டம் விடுதலை அடைந்து 33 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. மேலே குறிப்பிட்ட எந்த ஓர் அமைப்பாலும் மக்களுடைய எதிர்பார்ப்புகளில் ஒரு குறிப்பிட்ட அளவு கூட நிறைவேறவில்லை. அல்லது வெற்றியாக வில்லை.

இன்னும் சொல்லப் போனால் இந்தியத் துணைக்கண்டத்து மக்களில் முக்கால் பங்குக்கும் மேற்பட்ட மக்கள் சமுதாய ஏற்றத் தாழ்வுகளாலும்; பொருளாதாரப் பற்றுக்குறைகளாலும், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்வதாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தின் தாக்குதல்களால் பாதிக்கப் பட்டிருப்பதாலும், அரசாங்கக் கட்சிகளின் ஊழல்களாலும், அரசாங்க அதிகாரிகளின் இலஞ்ச வெறியாலும், வணிகர்களின் கள்ளச் சந்தையாலும் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். எனவேதான், எல்லா மக்களுக்கும், எல்லா அமைப்புக்கள் மீதும் இருந்த ஆர்வமும், நம்பிக்கையும் மெலிந்து நலிந்து இழிந்து அழியும் நிலைக்கு வந்து விட்டன. இந்த நிலைதான் வரலாற்றுப்படி புதுமையை விளைவிக்கும் புரட்சிக்குரிய பக்குவநிலை. நமது குருதேவரால்தான் சித்தர் நெறிக் கருத்துக்களைச் சான்றாகவும் ஊன்றாகவும் காட்டி உடனடியாக நாடோடிகள், பிச்சைக்காரர்கள், அனாதை நோயாளிகள், கல்வி பெறாமல் கடுமையான உடல் உழைப்பில் ஈடுபட்டிருக்கும் பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர்கள், வேலையில்லாதவர்கள், வறுமையில் வாடுபவர்கள், வாழ்வின் தேவைக்கேற்ற ஊதியம் பெறாதவர்கள், விருப்பத்திற்கேற்ற கல்வியை கற்காதவர்கள், திறமைக்கும் ஆர்வத்துக்கும் ஏற்ற தொழிலைச் செய்ய முடியாதவர்கள், தொடர்ந்து நீடிக்காமல் மிகமிகக் குறுகிய காலகட்டத்திற்குள் உயரிய நிலையினை அல்லது உரிய நிலையினை பெறுமாறு செய்ய முடியும்! செய்ய முடியும்!! செய்ய முடியும்!!! என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறார்.

இக்குறிக்கோளை இனவேறுபாடோ, மொழி வேறுபாடோ, மாநில வேறுபாடோ இல்லாமல் இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் எல்லோருக்கும் பெற்றுத் தரக்கூடிய தரமும், திறமும், மறமும், உரமும், செயலாற்றலும், செயல்திட்டங்களும், தெளிவான சித்தாந்தங்களும், தத்துவங்களும் உள்ளவர்தான் நமது குருதேவர். அதைப் படிப்படியாக அடிப்படையோடு கற்றும் பயின்றும் தேறியும் முதிர்ந்து வருபவர்கள்தான் நாம். நாம் நூறு பேர், ஆயிரம் பேர், நூறாயிரம் பேர் என்று வளர்ந்து வருவது தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாகி விட்டது. நாமெல்லாம் இந்தியாவின் தொன்மையான பண்பாட்டு நெறியைக் குறிக்கும் இந்து என்ற சொல்லை அப்படியே ஏற்று ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ என்ற ஓர் அமைப்பை உருவாக்கி யிருக்கிறோம். இதனை இந்தியர் மறுமலர்ச்சி இயக்கம் என்றே சொல்லலாம்.

ஆனால், இந்தியாவில் உள்ள மக்கள் புத்தர்களாகவோ, சமணர்களாகவோ, கிறித்துவர்களாகவோ, இசுலாமியர்களாகவோ, கம்யூனிசுட்டுகளாகவோ மாறியவுடன் தங்களுடைய நாடு இந்திய நாடு, தங்களுடைய பண்பாடு இந்தியப் பண்பாடு, தங்களுடைய நாகரீகம் இந்திய நாகரீகம், தங்களுடைய வாழ்வியலுக்குரிய மண் இந்திய மண், தங்களுடைய நடைமுறைப் பழக்க வழக்கங்களும் மரபுகளும் ஒழுகலாறுகளும் இந்தியாவில் பிறந்தவை என்பவைகளை எல்லாம் அடியோடு மறந்தும் துறந்தும் மறுத்தும் வெறுத்தும் எதிர்த்தும் பகைத்தும் பழித்தும் அழித்தும் செயல்படுபவர்களாக மாறிவிட்டார்கள். இது இந்திய நாட்டில் மட்டுமே ஏற்பட்டு விட்ட ஒரு மாபெரும் முறைகேடு, சாபக்கேடு.

ஏனென்றால் ஒரே புத்த மதத்தை அல்லது கிறித்துவ மதத்தை அல்லது இசுலாமிய மதத்தைத் தழுவக் கூடிய சின்னஞ்சிறு நாடுகளெல்லலம் கூடத் தங்களுடைய நாட்டுப் பற்று, நாட்டுக்குரிய பண்பாட்டுப் பற்று, நாகரீகப் பற்று, மரபுப் பற்று, பழக்க வழக்கப் பற்று, இனப்பற்று, மொழிப்பற்று முதலியவைகளை விட்டுவிடாமல்தான் இருக்கின்றனர். அதாவது மேலே குறிப்பிட்ட மதத்தவர்களெல்லாம் தொன்றுதொட்டு தங்களுக்கென வரக்கூடிய உணவுமுறைகளையும், உடைமுறைகளையும், உறவுமுறைகளையும், விழாக்களையும், சடங்குகளையும், நம்பிக்கைகளையும், மற்ற பழக்க வழக்கங்களையும் ஊசிமுனையளவு கூட மாற்றிக் கொள்ளாமல் புதிய

புதிய மதங்களை ஏற்று வாழுகின்றார்கள். இதனால்தான் ஒரே மதத்தைச் சேர்ந்த நாடுகளெல்லாம் ஒற்றுமையாக வாழ முடியாமல் ஒன்றுக்கொன்று போரிட்டுக் கொண்டே இருக்கின்றன.

இதனைப் பச்சையாகவும், கொச்சையாகவும் சொல்ல வேண்டுமென்றால் ஒரே நாட்டைச் சேர்ந்த பல நாட்டு மக்கள், தங்கள் தங்களுடைய இன நலத்துக்காக, மொழி நலத்துக்காக, நாட்டு நலத்துக்காக, நாட்டுப் புகழுக்காக, வட்டாரப் பெருமைக்காக, நாகரீகப் பாதுகாப்புக்காக தொன்று தொட்டு வரும் மரபுகளுக்காக, வரலாற்றுச் சிறப்புக்காக தங்கள் மதத்தையே சேர்ந்த நாட்டைக் கூட ஆயுதம் தாங்கி எதிர்த்துப் போரிட்டுக் கொன்று குவித்துக் குருதியாறு ஓடவிடுவார்கள். ஆனால், இந்தியாவிலுள்ள வேற்று மதத்தைத் தழுவியவர்கள் அல்லது அந்நிய நாட்டு மதத்தைத் தழுவியவர்கள் இந்தியாவுடன் தங்கள் மதத்தைச் சேர்ந்த நாடு போர் புரிய நேரிட்டால் இவர்கள் இந்திய நாட்டுக்காக, இந்திய இனத்துக்காக, இந்தியப் பண்பாட்டுக்காக, இந்திய நாகரீகத்துக்காக தொன்றுதொட்டு வரும் இந்தியப் பாரம்பரியத்துக்காக, இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புக்காக போரிட முன் வருவார்களா? அதாவது இந்தியாவிலுள்ள அந்நிய நாட்டு மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியாவுக்காக, இந்தியர் என்ற உணர்வோடு, தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள மதத்தைச் சேர்ந்த நாடுகளுடன் எதிர்த்துப் போரிட முன்வருவார்களா? என்பதே நம்முடைய வினா. இதற்குரிய விடை இந்தியாவுக்கே உரிய இந்துமதத்தைச் சேர்ந்த இந்தியர்களுக்கும், வேற்று நாட்டு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தெளிவாகத் தெரியும். எனவே, அதைப்பற்றி இங்குக் குறிப்பிட வேண்டியது அவசியமுமில்லை, அது நாகரீகமுமில்லை.

5) இனிய நண்ப! **இந்துமதம் என்பது மற்ற மதங்களைப் போல் ஒரு மதமல்ல. இது ஒரு சமுதாயத் தத்துவம்**. (*The Indhuism is a Social Philosophy; and it is not a Religion like other religions*) இதை இன்னும் சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்துமதம் என்பது இமயம் முதல் குமரி முனை வரை ஒரே பெருநிலப் பரப்பாக இருக்கும் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழுகின்ற மக்களுடைய வாழ்வியல் சித்தாந்தம் (*The Indhuism is a practical principle of human life or It is a theology which explains the Individual life,*

*ways and means of an Indian*) மட்டுமல்ல, குமரி முனைக்குத் தெற்கில் கடலுக்குள் உள்ள மறைந்த குமரிக் கண்டத்தின் (The Lost Lemuria Continent) மிஞ்சிய பகுதிகளாக உள்ள எண்ணற்ற தீவுகளிலும், ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய கண்டங்களின் குறிப்பிட்ட பகுதிகளிலும், உலகின் பல பகுதிகளிலும் வாழுகின்ற இந்திய மக்களின் வாழ்வியல் சித்தாந்தமும் ஆகும்.

அதாவது இந்த மண்ணுலகில் மனித இனம் தோன்றிய காலத்தில், விண்வெளியில் உள்ள அண்டங்களிலிருந்து இம் மண்ணுலகுக்கு வந்த பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், மற்றும் பல்வேறு வகைப்பட்ட அருளாளர்களும், அந்த மனிதர்களைத் தனிமனித வாழ்விலும் (Personal Life or Individual LIfe), குடும்ப வாழ்விலும் (Family Life), சமுதாய வாழ்விலும் (Social Life), அரசியல் வாழ்விலும் (Political Life) பயிற்சி பெற்று தேர்ச்சி அடைவதற்காக உருவாக்கிய தத்துவமும் (Philosophy), சித்தாந்தமும் (Theology), செயல்முறைத் திட்டமும் (Plans and Schemes), பழக்க வழக்கங்களும் (Customs and Manners), ... தான் இந்துமதம் என்று இன்றைக்கு அழைக்கப் படுகின்ற சித்தர் நெறி. (*That is to say, in due course, the Siddharism - the policies and principles of Siddhars - is named as 'The Indu Religion' which is now called as Indhuism. So, the Aryan Vedic Culture, Vedas, Puranas, Ithihaasas and Upanishads, ... have nothing to do with 'The Indhuism', 'The Siddharism', the so-called Hinduism*). இப்பேருண்மையினை உலகத்துக்கு உணர்த்துவதற்கு முன் இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் (மத வேறுபாடின்றி) உணர்த்திடல் வேண்டும். அதுவே உடனடியாகத் தேவைப்படுகின்ற அவசியமான அவசரமான செயல்திட்டம்.

இதற்காகத்தான் நமது குருதேவர் தேவகுரு, அசுரகுரு, சுரகுரு, ஞானகுரு, ஞாலகுரு, அரசயோகி, ஆத்தாள் அமளிகை, பராசத்தி திருவடி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார் அவர்கள் மிகப்பெரிய நெடிய முயற்சிகளை விரிந்தும், விரைந்தும் செய்து வருகிறார். அதன் பயனாக ஆயிரமாயிரம் அருளாளர்கள் உலகெங்கும் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். மிக விரைவில்

மலைமுகடுகளிலும், காடுகளிலும், வனங்களிலும், குகைகளிலும், குக்கிராமங்களிலும், இருள் படர்ந்த இடிபாடுகள் மிக்குற்று கேட்பாரற்றுக் கிடக்கும் வழிபாட்டு நிலையங்கள் உட்பட (கோயில்கள் = Temples, that is to say, the word Koil is used as a general term in Tamil to denote all types and varieties of the worshipping places = தமிழில் கோயில் என்ற சொல் எல்லா வகையான வழிபாட்டு நிலையங்களையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகும்) எல்லாக் கோயில்களும் இனி மிக விரைவில் புத்துயிர்ப்புச் செய்யப்பட்டுக் கட்டிட உறுதியும், வடிவச் செம்மையும், அருளொளியும், பூசை ஒழுங்கும், பிற வழிபாட்டுமுறை ஒழுங்கும் பெற்றிடும். அதன் பிறகே, கோயில் பாசறைகளாகும். பத்திநெறி போர்ப் பயிற்சி முறையாகிடும். விழாக்கள் போரின் ஒத்திகைகளாகிடும். அதன்பிறகே மாபெரும் ‘**இந்துமத சமத்துவ சகோதரத்துவ பொதுவுடமைக் கூட்டாட்சித் தத்துவம்**’ செயலாகிடும். ‘பாரதப் போர்’ நிகழ்ந்தே தீரும். இந்த முறை கண்ணன் கையில் ஆயுதங்கள் ஏந்துவான்; தலைமைதாங்கிப் படை நடத்துவான்; வியூகங்கள் வகுப்பான்; அத்திறங்கள் ஓச்சுவான்; அறப்போர்! மறப்போர்! வெற்றிப்போர்! போர்! போர்! போர்! நிகழ்ந்தே தீரும்.

அமைதியும், மகிழ்ச்சியும், ஒற்றுமையும், பற்றும், பாசமும், அன்பும், கனிவும், இனிமையும், சமத்துவமும், கூட்டுறவும் தழைத்துச் செழித்து வளர்ந்திடும். அப் பொற்காலத்தை உருவாக்கும் செயல்வீரர்களாக நாமனைவரும் பொறுப்புடனும், விறுவிறுப்புடனும், சுறுசுறுப்புடனும் விரிந்து செயல்பட்டிடல் வேண்டும். அதற்காக உங்களையும், உங்களின் மூலம் எல்லா இந்துக்களையும் அணி திரளுமாறு அழைக்கின்றேன் இவ் அஞ்சலின் மூலம். அன்புகூர்ந்து இவ்வஞ்சலைப் பெறுகின்ற ஒவ்வொருவரும் இந்த அஞ்சலுக்குத் தங்களால் இயன்ற அளவு பலநூறு நகல்களை எழுதி எழுதி நம்மவர்களுக்கும், நாம் சந்திக்கும் புதியவர்களுக்கும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். உடனடியாக நமது குருதேவருக்கும், சென்னை சூரப்பட்டு கருமாரியம்மன் சன்னிதானத்திற்கும், மதுரை தாயுமானவர் சன்னிதானத்திற்கும், காரியேந்தல்பட்டி வீரமாகாளி சன்னிதானத்திற்கும், இரா.இரா.முத்திரைக்கோட்டையில் உள்ள புன்னைநல்லூர் மாரியம்மன் சன்னிதானத்திற்கும், கொளக்குடி தொட்டியம் மதுரைக்காளி

சன்னிதானத்திற்கும், திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி வாழ் சன்னிதானங்களுக்கும், மஞ்சங்காரணை சங்காத்தம்மன் சன்னிதானத்திற்கும், வீரப்பூர் பெரிய காண்டியம்மன் சன்னிதானத்திற்கும், தேவதானப்பட்டி காமாட்சியம்மன் சன்னிதானத்திற்கும், ஆத்தாள் கருப்பழகி சன்னிதானத்திற்கும், திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் சன்னிதானத்திற்கும், சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானத்திற்கும், தேவி காஞ்சி காமாட்சியம்மன் சன்னிதானம், பல்லவப் பெருமண்டலத் துணைக்குருவாணை ஓலைநாயகம், ஆதிசங்கராச்சாரியார் சன்னிதானம், பல்லவப் பெருமண்டல துணைக் குருவாணை ஓலைநாயகம், தொம்பரத்தம்மன் சன்னிதானம் முதலியவர்களுக்கும், மற்றவர்களுக்கும் அவசர அவசியமாக அனுப்பி வைக்கவும். இது திருவுள ஒப்புதல் பெற்ற குருவாணை.

**குறிப்பு:-**

1) இந்த அஞ்சலை அருள்மிகு சோழப் பெருமண்டல அருளாட்சித் திருவோலக்க நாயகம், ஆத்தாள் முப்புரம் கொண்டருளு தேவி ஆதிபராசத்தி ஆதீனம், பதினெண்சித்தர் குருவழி கொண்டருளு குரிசில், சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்கள் எழுத ஆரம்பித்த போதிலும் பல்வேறு காரணங்களால் நின்றுவிட்டது. எனவே, திருவுள ஒப்புதலும், குருவாணையும் பெற்று அருள்மிகு 'பாண்டிப் பெருமண்டலக் குருவாணை ஓலைநாயகம், சிவகங்கை வெட்டுடையார் காளியம்மன் சன்னிதானம், காளையார் கோயில் ஆதீனம், ஞானக்காட்சி வழங்கு நாயகம், அருளாட்சி ஓலைநாயகம், சித்தர்நெறிக் குரவர், அருட்சேனை இணைத் தளபதி' சித்தரடியான் இரா.சண்முகானந்தன் தொடர்ந்து இரவு பகலாக எழுதியே இந்த அஞ்சலை நிறைவு செய்ய நேரிட்டது.

2) இந்த மூல அஞ்சல் பெரியவர் பதினெண்சித்தர் சத்தி பீடம், திருவருட்செல்வர், காருகுடி N.திருநாவுக்கரசுப் பிள்ளை அவர்களிடமே இருக்கட்டும். அவர்கள் முன்னிலையில்தான் இதற்கு நகல்கள் எழுதப்படல் வேண்டும். குருவாணை.

**'ஞாலகுரு' சித்தர் கருவூரர்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்று கண்டறிய முடியவில்லை//**

# உங்களின் சிந்தனைக்கு ...

***இந்து*** என்று ஒரு சொல் அந்தத் தத்துவத்திற்குப் பெயர்; இந்து என்றால் உயிர், உயிரின் அணு என்று பொருள். விந்து என்ற சொல் இந்து என்ற சொல்லாகியிருக்கிறது. விந்து என்ற சொல் உயிரைப் பற்றியது! உயிரின் அணுக்களைப் பற்றியது! உயிரின் வாழ்க்கையைப் பற்றியது! உயிர்களின் ஆரம்பம், முடிவுகளைப் பற்றியது! உயிரின் முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்புப் பற்றியது. உயிருள்ள மனிதர்கள் இறந்து விட்டால் அந்த உயிர் என்ன ஆகிறது? இந்த வாழ்க்கைக்குப் பிறகு என்ன? என்பதை விளக்குகின்ற ஒன்று; அல்லது பிறப்பதற்கு முன்னாலே இந்த உயிர் எங்கே இருந்தது? அப்படி முற்பிறப்புக்களை விளக்குகின்ற ஒன்றுதான் விந்து என்ற சொல். இந்த இந்து என்ற சொல் அனைத்தையுமே விளக்குகிறது. ... ...

## இந்து இலக்கியக் கழகத்தின் பிற வெளியீடுகளையும் வாங்கிப் படியுங்கள்.

| | | |
|---|---|---|
| 1) | மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி | ரூ.108/- |
| 2) | இந்துவேதம் தரும் பூசைமொழி, பூசைமுறைகள் | ரூ. 5/- |
| 3) | எந்த மானுடம் இந்த மானுடம் | ரூ.18/- |
| 4) | சிந்திக்கலாமா? | ரூ.36/- |
| 5) | இருக்கு வேதத்தில் பெருமால் காயந்திரிகள் | ரூ.50/- |

## இவ்வெளியீடுகள் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

1) சித்தரடியான் திரு கார்த்திக் சிவராமன், கிழக்கு தாம்பரம், சென்னை, 9972130609
2) சித்தரடியான் திரு வீரபாண்டி, மதுரை, 9994983391
3) சித்தரடியான் திரு சங்கிலி கருப்பசாமி, திருச்சுழி 9655017508
4) சித்தரடியான் திரு மோகனரங்கம், திருவொற்றியூர், சென்னை 9840670874
5) சித்தரடியான் திரு சந்திரன், புன்னப்பாக்கம், வெங்கல், 9943670235
6) சித்தரடியார் திரு இரமணு, ஆரணி, 9629450166

**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்.**



**இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப்பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.**

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**

---

**கட்டிய கோயில்கள் வெட்டிய அருள் ஊற்றுக்களே.**

**தமிழ்ப் பற்றே தமிழின ஒற்றுமை; தமிழின ஒற்றுமையே இந்து மதம் காக்கும்.**



**அம்மையப்பர்**

---

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்).
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
Printed at Kavin Printers, Madurai.

**www.gurudevar.org Email: indhuism@gmail.com**